## (DEPOSITION OF WITNES

### (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | S.T.C.198/2024 | Date: 02.08.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | புஷ்பா | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் வருகிறதா என்றால் இல்லை. எனது கணவர் பெயர் சேகர். எனது கணவர் எங்கு வேலை செய்து வருகிறார் என்றால் சக்தி பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் மேலாளராக பணிசெய்து வருகிறார். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது கணவரின் நண்பர் ஆவார். எதிரி எங்கு வசிக்கிறார் என்ற முகவரி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது கணவர் சொல்லி தெரியும்.

2) எதிரி எங்கு பணிபுரிந்து வருகிறார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, எனது கணவர் சொல்லி தெரியும். எனது கணவர் வேலை செய்யும் சக்தி பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் எதிரியின் குடும்பத்தார் கடன் பெற்றுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அரசு பணியில் உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதனால், எதிரிக்கு மாதம் வருமானம் வரும் என்றால் சரிதான்.

3) இவ்வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எதிரி என்னிடம் அடிக்கடி கடன் வாங்கினார் என்று நான் எனது புகாரில் சொல்லியுள்ளபோது எந்த தேதி, எவ்வளவு தொகை என்று சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. எதிரி முன்பு செய்த பணபரிவர்த்தனைக்கு பிணையமாக எந்த ஆவணம் வாங்கவில்லை. எதிரிக்கு எந்தெந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்பதை எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் என்ன குடும்ப தேவைக்காக பணம் கேட்டார் என்றால் எனது கணவரிடம் எதிரி கூறி எனது கணவர் என்னிடம் பணம் வாங்கி கொடுத்தார். நான் பணத்தை எனது கணவரிடம் தான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

4) கடந்த 21-03-2021ம் தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதை காண்பிக்க என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் காசோலையை எனது கணவர் தான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி, காசோலையை நான் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் கையொப்பம் செய்யும்போது இனிசியலை பெயருக்கு முன்னால் தான் போடுவேன் என்றால் சரிதான். காசோலையை எனது கணவர் தான் பூர்த்தி செய்தார் என்றால் சரிதான். காசோலையில் உள்ள தேதியில் எனது கணவர் தாரமங்கலத்தில் வேலை செய்து வந்தார் என்றால் இல்லை, சங்ககிரியில் வேலை செய்து வந்தார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Pushpa

Judicial Magistrate No.1,

Sankari.